பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

14 03 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வநிதி திட்ட பயனாளிகளுடன் பிரதமர் திரு நரேந்திரமோடி புதுதில்லியில் இன்று கலந்துரையாடுகிறார்.
2. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் மொரீஷியஸ் பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
3. ராணுவம் மற்றும் கடலோர காவல்படைக்கு 34 அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கு எச் ஏ எல் நிறுவனத்துடன் - பாதுகாப்பு அமைச்சகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.
4. மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 72 வேட்பாளர்கள் அடங்கிய இரண்டாவது பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.
5. ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – தனிஷா கிராஸ்டோ இணை கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வநிதி திட்ட பயனாளிகளுடன் பிரதமர் திரு நரேந்திரமோடி புதுதில்லியில் இன்று கலந்துரையாடுகிறார்.

புதுதில்லி ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடைபெறும் இதற்கான நிகழ்ச்சியில் நாடு முழுவதிலும் உள்ள ஒரு லட்சம் சாலையோர வியாபாரிகளுக்கு கடன்களையும் பிரதமர் வழங்குகிறார்.

தில்லி மெட்ரோ திட்டத்தின் நான்காவது கட்டத்தில் இரண்டு வழித்தடங்களுக்கும் திரு நரேந்திரமோடி அடிக்கல் நாட்டுகிறார்.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மூன்று நாள் மொரீஷியஸ் பயணத்தை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

அவரது இந்த பயணத்தின் போது இந்தியா - மொரீஷியஸ் இடையே நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையமும், மொரீஷியஸ் அரசு பணியாளர் தேர்வாணையமும், இணைந்து செயல்படுவதற்கான ஒப்பந்தம், இரு நாடுகளின் புலனாய்வு அமைப்புகள் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இதில் அடங்கும்.

இந்தியா – மொரீஷியஸ் உயர்நிலை பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தையும் குடியரசுத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்த பேச்சுவார்த்தையில் ஆலோசிக்கப்பட்டது.

இந்தியாவின் உதவியுடன் அந்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள 14 சமூக மேம்பாட்டு திட்டங்களையும் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்களின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இப்பிரிவுகளைச் சேர்ந்த ஒரு லட்சம் தொழில் முனைவோருக்கு காணொலி மூலம் கடனுதவிகளை வழங்கி பிரதமர் உரையாற்றினார்.

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் ஷெடியூல்டு வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டம், பிரதமரின் வீட்டு வசதி திட்டம், இலவச சமையல் எரிவாயு உள்ளிட்ட பல திட்டங்களில் பெரும்பாலான பயனாளிகள் இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்கள்தான் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

ஷெடியூல்டு வகுப்பினரின் நலனுக்காக இந்த ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஷெடியூல்டு வகுப்பினர் தொழில் முனைவோராக வேண்டும் என்ற நோக்கில் தொழில் பாதுகாப்பு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கி உள்ளதாக திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாட்டில் இயற்கை முறையில் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் ஏழு மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தேசிய அளவிலான மூன்று கூட்டுறவு சங்கங்களின் அலுவலகங்களை நேற்று புதுதில்லியில் திறந்து வைத்து அவர் பேசினார்.

31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இந்த அலுவலகங்கள் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளதாகக் அவர் கூறினாா

ஏற்றுமதிக்கான வேளாண் கூட்டுறவு சங்கங்களின் வர்த்தகத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விதைகளுக்கான கூட்டுறவு சங்கம் மூலமாக தரமான மற்றும் பாரம்பரிய விதைகள் அதிக அளவில் கிடைக்க வகை செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள மூன்று கூட்டுறவு அமைப்புகள் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்போது, விவசாயிகள் எதிர்கொள்ளும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று திரு அமித்ஷா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 72 வேட்பாளர்கள் அடங்கிய இரண்டாவது பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

மகாராஷ்டிரா, கர்நாடகா, ஹரியானா, தெலுங்கானா, குஜராத், மத்திய பிரதேசம், ஹிமாச்சல பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் சில மக்களவைத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

மத்திய அமைச்சர்கள் திரு அனுராக் சிங் தாக்கூர் ஹிமாச்சலப் பிரதேசம் ஹமீர்பூர் தொகுதியிலும், திரு நிதின் கட்கரி மகாராஷ்டிராவின் நாக்பூர் தொகுதியிலும், திரு பியூஷ் கோயல் மும்பை வடக்கு தொகுதியிலும், திரு பிரல்ஹாத் ஜோஷி கர்நாடகாவின் தார்வாட் தொகுதியிலும் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜேபி தலைவர் திரு ஜெபி நட்டா தலைமையில் நடைபெற்ற அக்கட்சியின் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில் வேட்பாளர்களின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

34 அதிநவீன இலகு ரக ஹெலிகாப்டர்களை வாங்குவதற்காக இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்துடன் 8 ஆயிரத்து 73 கோடி மதிப்பிலான இரண்டு ஒப்பந்தங்களில் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று கையெழுத்திட்டது.

ராணுவத்திற்கு 25 நவீன இலகுரக ஹெலிகாப்டர்களும், கடலோர காவல்படைக்கு ஒன்பது நவீன இலகு ரக ஹெலிகாப்டர்களையும் வாங்குவதற்கு இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேடுதல் மற்றும் மீட்பு, படையினரின் போக்குவரத்து, சரக்கு போக்குவரத்து, விபத்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் ஹெச் ஏ எல் நிறுவனத்தின் ஹெலிகாப்டர்கள் வடிவமைக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

உத்தரகண்ட் மாநில பொது சிவில் சட்ட மசோதா-வுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த மசோதா அமல்படுத்தப்படுவதன் மூலம், சுதந்திரத்திற்குப் பிறகு பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முதல் மாநிலமாக உத்தராகண்ட் உருவெடுக்கும்.

சென்ற மாதம் ஏழாம் தேதி, உத்தரகாண்ட் சட்டப்பேரவையில் பொது சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டது.

**[]<<<>>>[]**

தெற்கு ரயில்வேயின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

தெற்கு ரயில்வேயின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து சென்னையில் அவர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பாதுகாப்பு, ரயில்வே சொத்துக்களை பராமரித்தல், சரக்குப் போக்குவரத்தை அதிகரித்தல் போன்ற அம்சங்கள் குறித்து அமைச்சர் ஆய்வு மேற்கொண்டதாக தெற்கு ரயில்வேயின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது

**[]<<<>>>[]**

பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படி நாடுமுழுவதும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் முதல்முறை வாக்காளர்களை ஈர்க்கும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, வேலூர் மாவட்டத்தில், மாணவர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இது மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் முதல்முறை வாக்கு செலுத்துவது உற்சாகம் அளிப்பதாக உள்ளது என்றும் மாணவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - மாணவர்கள் - 32 செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

நேபாள நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் அந்நாட்டுப் பிரதமர் திரு புஷ்ப கமல் தஹால் பிரசண்டா தலைமையிலான அரசு வெற்றி பெற்றது.

275 உறுப்பினர்களைக் கொண்ட அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக 157 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

திரு பிரசண்டாவின் சி பி என் - மாவோயிஸ்ட் மையக் கட்சிக்கும் நேபாள காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயான கூட்டணி முறிந்ததை அடுத்து திரு பிரசண்டா புதிய கூட்டணியை உருவாக்கினார்.

இதையடுத்து பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

உலக சிறுநீரக தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

அனைவருக்கும் சிறுநீரக நலன் என்பதை கருப்பொருளாகக் கொண்டு இந்த ஆண்டு இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்த தினத்தையொட்டி சிறு நீரக நோய்களை தடுப்பது குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – கனிஷ்டா கிராஸ்டோ இணை கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா செனும், ஆடவர் இரட்டையர் பிரிவின் ராங்கிரெட்டி - ஷிராக்ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**[]<<<>>>[]**

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தில்லி அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்துடன் லீக் சுற்று போட்டிகள் நிறைவடைந்தன.

புள்ளிப் பட்டியல் அடிப்படையில் தில்லி அணி நேரடியாக இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இரண்டு, மூன்றாம் இடங்களை பிடித்த மும்பை மற்றும் பெங்களூரு அணிகள் நாளை நடைபெறும் எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் மோதவுள்ளன.

இதில் வெற்றிபெறும் அணி வரும் 17-ஆம் தேதி நடைபெறும் இறுதி ஆட்டத்தில் தில்லி அணியை எதிர்கொள்ளும்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மோகன் பெஹான் அணி – கேரள அணியை வென்றது.

இன்றைய ஆட்டத்தில் கோவா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

சென்னையில் நடைபெற்றும் ப்ரைம் வாலிபால் லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் தில்லி அணி – கோழிக்கோடு அணியை வென்றது.

***End of News***